## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2023-ம் ஆண்டு ஜீலை மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகேசன் | தொழில் : | |
| த.பெ: | மலைச்சாமி | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**20.7.2023 OS No. 32/2021 வா.சா.1** முருகேசன் **ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் எத்தனை வருடமாக குடியிருக்கிறேன் என்றால் 2015 முதல் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்னால் தாவா சொத்தில் யார் குடியிருந்தது என்றால் நாகராஜனின் தங்கை குடியிருந்தார். தாவா வழக்கை நடத்துவதற்கு யார் வழக்கறிஞர் வைத்து கொடுத்தது என்றால் ராகவன்தான் வழக்கறிஞர் வைத்து கொடுத்தார். ராகவன் யார் என்றால் தாவா சொத்தின் உரிமையாளரான நாகராஜனின் மகன் ஆவார்.

2. தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு யார் விபரங்கள் சொன்னது என்றால் நாகராஜன்தான் சொன்னார். அவருக்குதான் எல்லா விபரங்களும் தெரியும். நான் வாடகைக்குதான் குடியிருக்கிறேன். 1ம் பிரதிவாதி நாகராஜன் சொன்ன இடத்தில்தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாகராஜன்தான் சொன்னார். 1ம் பிரதிவாதி நாகராஜன்தான் தாவா சொத்திற்கு உரிமையாளர் எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் அவர்தான் வாடகைக்கு வீடு வீட்டார்.

3. மின்கட்டணம் நான்தான் செலுத்துவேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நாகராஜன்தான் செலுத்துவார். மின்கட்டண ரசீது யார் பெயரில் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் முன்பு யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. தற்போது 2ம் பிரதிவாதி ஜெகதீசன் பெயரில் உள்ளது என்று சொன்னார்கள். ஜெகதீசன் பெயரில் உள்ளது என்று யார் சொன்னது என்றால் 1ம் பிரதிவாதி நாகராஜன்தான் சொன்னார். வீட்டுவரி, சொத்து வரி அனைத்தும் ஜெகதீசன் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தின் உரிமையாளர் என்பதை 1ம் பிரதிவாதி நாகராஜன் சொன்னதன் பேரில்தான் கூறுகிறேன் என்றாலும், ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது,

யாருக்கு விற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு நடத்துவதற்கு எனது வழக்கறிஞருக்கு கட்டணம் அனைத்தும் நான் கொடுக்கவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி நாகராஜன்தான் கொடுக்கிறார் என்றாலும் சரிதான். தாவா சொத்து ஆதியில் சங்குச்சேர்வைக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதன் பின்பு சங்குசேர்வையின் குடும்பத்தார்கள் 18.5.1984 மற்றும் 16.8.1985 ஆகிய தேதிகளில் 2ம் பிரதிவாதியும் தகப்பனார் மற்றும் தாயாருக்கு பதிவு பெற்ற கிரைய ஆவணம் மூலம் தாவா சொத்தையும், அதை ஒட்டியுள்ள பகுதியையும் விற்கிரையம் செய்தனர் என்றாலும் சரியல்ல.

5. 2ம் பிரதிவாதியின் பெற்றோர் இறந்த பிறகு 22.12.2020 மற்றும் 11.1.2021 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட பாகபாத்திய விடுதலை ஆவணங்கள் மூலம் 2ம் பிரதிவாதியின் சகோதரர்கள், சகோதரிகள் அவர்களுக்கு விடுதலை கொடுத்துவிட்டனர் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதிதான் தாவா சொத்தின் உரிமையாளர் என்பதாலும், நான் தாவா சொத்தின் வாடகைதாரர் என்பதாலும், நான் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் சட்டவிரோதமாக வெளியேற்றக்கூடாது என்றுதான் பரிகாரம் கோர இயலும் என்றால் சரியல்ல.

6. கடந்த 7.4.2022ம் தேதி 2ம் பிரதிவாதி தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் பொறுப்புக்கள் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்துகொள்ள பதிவு தபால் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. மேற்படி அறிவிப்பை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 22.2.2019க்கு பிறகு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் பொறுப்புக்கள் முறைப்படுத்துதல் சட்டத்தின்படி பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குடியிருப்பவர் வாடகைதாரராகவோ, சட்டப்பூர்வ குடியிருப்பாளரகவோ கருத இயலாது என்றாலும், ஆக்கிரமிப்பாளராகதான் கருத இயலும் என்றாலும் சரியல்ல.

7. என்னை வாடகைக்கு வைத்தது 2ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. என்னுடைய வாடகையை 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி மூலம் வாங்கிவந்தார் என்றால் நாகராஜ்தான் வாடகைக்கு விட்டார். அவரிடம்தான் பணம் கொடுத்துவந்தேன். 2ம் பிரதிவாதியின் பெற்றோரிடம் 1ம் பிரதிவாதி வாடகை வசூல் செய்யும் வேலை செய்துவந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி அழைத்தும் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்ய வராததால் நான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பாளராக இருந்து வருவதால் நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பிராதில் 3ம் பிரதிவாதியாக செயல்அலுவலரை என்ன காரணத்திற்காக சேர்த்துள்ளேன் என்றால் வீடை காலிசெய்யவேண்டும், இடிக்கப்போகிறேன் என்று சொன்னார்கள், எனவே சேர்த்தோம். வீடை காலிசெய்யவேண்டும், இடிக்கப்போகிறேன்

என்பதற்கு ஏதேனும் அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. வீட்டை இடிக்கப்போகிறார்கள் என்று பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி தேவையில்லாத கட்சிக்காரர் என்றாலும் அவரை தேவையில்லாமல் வழக்கில் சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பிராதில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

2. 3ம் பிரதிவாதியை பொறுத்து எனது வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.